Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 26/June/2024 IJRAW: 2024; 3(8):18-24 Accepted: 31/July/2024

# மார்க்சிய நோக்கில்-சேர அரசியலின் அரசியல் முன்னகர்வும் அதனூடான பொருளாதார வைதீகக் கலப்பு நிலைகளும்

*1P Muthusamy

*1Ph.D. Research Scholar, Government Arts College (Autonomous), Coimbatore, Tamil Nadu, India.

**சுருக்கம்**

தொகை நூல்கள் எட்டினுள் ஒன்றாகத் திகழ்வது "பதிற்றுப்பத்து" இந்நூல் சேர அரச மரபின் பத்துமன்னர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிப்பனவாய் அமைந்துள்ளது, இதில் முதல் பத்து கடை பத்து கிடைத்ததில. எஞ்சிய இலக்கியச் செய்யுள் வழி கிடைக்கப்பெற்ற செய்திகளை மார்க்சிய நோக்கில் ஊடாடி கண்டதன் பொருளாகச் சேர மரபு சீறூர் மன்னர்கள் என்னும் சிறிய நிலப்பரப்பை ஆளுகை செய்த நிலையிலிருந்து பேரரசு நிலைக்குச் செல்ல இரு காரணிகளை கைக்கொள்கின்றனர். முதல் காரணிகளாக அமையப் பெற்ற போர்வெற்றிகள் மூலம் நிலவிரிவாக்கம் செய்து "பெரு நிலவுடைமையாளர்களாக" மாற்றம் பெற்ற வரலாற்றுத் தரவுகளை முறையே மன்னர் வரிசையில் குறிப்பிட்டும். இதனூடான செல்வங்கள் என்னும் வாணிபத்தினால் ஈட்டப்பட்ட "பொருளாதார வளமைகளை" குறிப்பிட்டும் விளக்கியமைந்து. மற்றுமொரு இணை காரணிகளாக "புனிதத்தன்மை, புத்தாக்கம், மேன்மைத்தன்மை" என்னும் மேட்டுக்குடி நிலைகளை வடபுல அரசர்களைப் (மௌரியர்) போல் வேத வேள்விகள் மூலமாக பெற்றுக்கொண்டு கட்டமைத்துக் கொண்ட "கருத்துருவாக்கம்" என்னும் இரு நிலைகளையும் விளக்கி மொழிவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**முக்கிய சொல்:** பதிற்றுப்பத்து. நிலவுடைமை. மார்க்சியம். மேட்டுமைநிலை. செல்வவளங்கள். வைதீகநெறி

## முன்னுரை

சமூக வரலாற்றில் அரசு உருவாக்கம் ஏற்படுத்திய படிமலர்ச்சியும் அதற்காகச் சமூகத்தில் அது ஏற்படுத்திய அசைவியக்கமும் அந்த அசைவியக்கத்திற்குத் துணைநின்ற காரணிகளையும் ஒன்றுபடுத்தி ஒருங்கு வைத்து எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது, இதனை ரோமிலோ தாப்பர் என்ற அறிஞர் "அரசின் மேற்கிளம்புகை என்பது சமூக வரலாற்றில் அரசு அது தான் தோன்றுவதன் காரணமாக அச்சமூகத்தில் குணமாறுதலை ஏற்படுத்தி ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல மாற்றங்களை வெவ்வேறு நிலைகளில் ஏற்படுத்துவது" என்று வரையறை செய்கின்றார். (பண்டைத்தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி கார்த்திகேசு சிவத்தம்பி பக்கம்-75, பத்தி-2)

இவ்வாறாகத் தமிழ்ச் சூழலில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி கிபி இரண்டாம் நூற்றாண்டு பிற்பகுதி வரையிலான காலகட்டத்தில் சேரமரபினர் சீறூர் மன்னர்களாக இருந்து பேரரசுகளாக உருமாற்றம் பெறப் பொருளாதாரமும், வைதீகநெறிகளும் எங்ஙனம் அரசோடு பொருந்தி நின்றன என்கின்ற நிலைகளை மார்க்சிய நோக்கில் அணுகுவதாக ஆய்வு அமைகின்றது..

*Corresponding Author: P Muthusamy

**மார்க்சியம் குறிப்பிடும் அரசு உருவாக்கத்தின் சில படிநிலைகள்**

ஆசியஉற்பத்தி முறைகளில் தமிழ்ச் சமூகத்தின் தொடக்க நிலை (குறிஞ்சி நில மாந்தர்கள்) சமூகஅமைப்பு வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் ஆகிய அடிப்படை நிலைகளை கொண்டவையாக அமைந்திருந்தது, இந்தச் சமூகங்களுக்கிடையே உற்பத்தி என்பது “உபரி” உடையதன்று, எனவே சமஉரிமை கொண்டிருந்த இத்தகைய சமூக மாந்தர்கள் பொதுவுடமையாகத் தங்களுக்குத் தேவையான உணவு முதலியவற்றைத் தேடித்திரிந்து பாதீடு செய்து கொண்டனர். இந்த மீள்வழக்குகையை அக்குடும்பத்தில் உள்ள வயதால் மிக மூத்தபெண் (தாய்) செய்திருப்பாள், இதுவே தாய்வழிச் சமூகஅமைப்பு என்று வழங்கப்படுகிறது.

பின்னாளில் சமூகங்கள் அளவால் பெருகத்தொடங்கிய (வெவ்வேறு திணை நிலங்களுக்கு பரவிய) நிலையில் தாய்க்கிருந்த இவ்வதிகாரம் ஆண் அதிகார மையங்களால் குழுத்தலைவன் என மாற்றம் பெற்று அவர்தம் தொன்மை நிலைப்பட்ட ஒரு முன்னோரைக் கொண்டதாய் உறவுமுறை விரிவுபடுத்தப்பட்டு வரன்முறையான ஒருங்குபடு குழுமக்கூறுகளாய் நிலைபெற்று இம்மீள்வழக்குகைகள் முறைப்படுத்தப்பட்டன. இக்குழுத்தலைமை முறையானதும் பின்னாளில் அக்குழுவிற்கு வரும் ஆபத்திலிருந்து எவன் காத்து நின்றானோ அத்தகைய காப்புவீரனுக்கு குழுத்தலைமை வழங்கப்பட்டது, இவ்வாறு உருவான தலைவனே “இறை” எனப்படுகின்றான். (எகா-கரந்தைமறவனின் பிள்ளையாட்டு நிலை)

இவ்வாறான குழுத்தலைவனுடைய சமூகம் மெல்ல மெல்ல ஒரு நிலப்பரப்பிலிருந்து மற்றொரு நிலப்பரப்பிற்குப் புலம்பெயர்ந்து குடியேறினார்கள், அதிலும் குறிப்பாக மென்புலம் என்று குறிக்கப்படும் நீர்ப்பாசன வசதியுடைய ஆற்றுச் சமவெளிகளில் அவர்களுடைய இருப்பு அமைந்தது, இந்தப் புலப்பெயர்வு குறிஞ்சி தொடங்கி முல்லை, மருதம், நெய்தலென விரிந்தது என்பதை திணைக் கோட்பாடு உணர்த்தி நிற்கின்றது. குறிஞ்சி என்பது வன்புல வைப்பாகவும், முல்லை என்பது சற்று வன்புலமும் மென்புலமும் கலந்த அமைப்பாகவும். மருதம் என்பது முற்றிலுமான மென்புலவைப்பபாகவும் அமைந்திருந்தது. இதனால் இதன் உள்ளான வளர்ச்சிநிலை என்பது வெவ்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளையுடையதாக அமைந்துள்ளது.

மென்புல வைப்பு என்று சொல்லக்கூடிய சமவெளிப் பரப்புகளில் விவசாயம் சிறந்து விளங்கிற்று, அது சார்ந்த அதனுடைய உற்பத்தி உபரி எனும் நிலையை எட்டி நின்றது, மேற்கண்ட “உபரி” என்னும் இவ்வளர்நிலையானது. மெல்ல மெல்ல திணை சார்ந்த ஒவ்வொரு நிலத்திற்கும் பாகுபாட்டை ஏற்படுத்தியது, மேலும் “மீள் வழக்குகை” என்பது “பண்டமாற்று” முறையாக மாற்றம் பெற்றது.

இவ்வாறான பாகுபாட்டு நிலை ஒவ்வொரு குடிகளுக்குள்ளும் போர்களை ஏற்படுத்தத் தொடங்கியது, எனவே அதற்கு இராணுவம் மற்றும் அதை தலைமை தாங்கக்கூடிய ஒரு ஆற்றல் மிக்க தலைவன் தேவைப்பட்டான் எனவே சிறுகுழுதலைவன் என்கின்ற முறை மன்னன் என்ற (மன்னுதல்-நிலைத்த) குடித்தலைமை முறைக்கு மாற்றம் பெற்றது. இதுவே சீறூர் மன்னர் என்கின்ற சிறுகுடித் தலைமை நிலையாகும். இதில் ஒரே குழுமக்குறி கொண்ட பல குடிகள் இணைந்திருந்தனர்,

இவ்வாறு உருவான சீறூர் மன்னர்கள் தங்களுடைய உபரி வளங்களாலும் மக்கள்சக்தி கொண்ட இராணுவ வலிமைகளாலும் தங்களுடைய நில உடமைகளையும், அதனூடான பொருளாதாரத்தையும் விரிவுபடுத்துகின்றனர், மேலும் சடங்கியல் ரீதியாக சமூகப்புனித கருத்தாக்காக்கங்களையும் (வைதீகசிந்தனைவழி) தோற்றுவித்துக் கொள்கின்றனர், இவ்வாறான உடமையாக்கமே சீறூர் மன்னர்களை “வேந்தர்” எனும் நிலைக்கு உயர்த்துகின்றது. இத்தகைய வேந்தர் நிலையே பேரரசுகளின் தோற்றுவாய் நிலைக்கு வித்திட்டது.

**சேரர்களின் வரலாற்று எழுத்துகை**

சேர அரசர்களைப் பற்றி அறிய உதவும் நூல்களுள் பதிற்றுப்பத்து முதன்மையாகவும் அதனை ஒட்டிய ஏனைய அகத்திணைப் பாடல்கள் மற்றும் புறத்திணைப் பாடல்கள் உடைய தொகை நூல் தொகுப்புகள் மற்றும் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் ஏனைய ஆதாரங்களாகவும் அமைகின்றன.

இதில் வரும் குறிப்புகளைக் கொண்டு அறிஞர் பெருமக்கள் பலவாறு சேரவரலாற்றை ஆய்வு செய்துள்ளனர், அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இருபெருமக்கள், ஒருவர் “சேரமன்னர் வரலாறு” என்னும் நூல் எழுதிய ஔவை,சு,துரைசாமி பிள்ளை மற்றொருவர் “கொங்கு நாட்டு வரலாறு” மற்றும் “துளுநாட்டு வரலாறு” எழுதிய மயிலை சீனி, வேங்கடசாமி. இரு பெருமக்களும் ஒரேநேர்கோட்டில் களப்பணியாக இவ்விலக்கியம் குறிப்பிடும் இடங்களை ஆய்ந்து எழுதியபோதும் இருவருடைய

ஆய்வுகளுக்குள்ளும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன, இருப்பினும் அச்சிறு வேறுபாடுகளை நீக்கி தொல்பொருள் ஆய்வுத் தரவுகள் மற்றும் இலக்கியத்தரவுகளை மீள்வாசிப்பு செய்யும்போது மேற்கண்ட இரு அறிஞர்களின் வரலாற்று எழுத்து என்பது பொருத்தப்பாடு உடையதாகவே அமைகின்றது.

இருபெருமக்களின் நூல்வரலாற்று குறிப்புகளை மையமாகக் கொண்டு மார்க்சிய நோக்கில் சேர அரசனுடைய பேரரசு உருவாக்கநிலைகள் பின்வருமாறு ஆராயப்படுகின்றன.

**சேரரின் துவக்க நிலை அரசியலும் புலங்களும்**

பழந்தமிழர் நிலப்பரப்பு செந்தமிழ்சேர் பன்னிரு நிலங்களாக குறிப்பிடப்படுகின்றது. அப்பன்னிரு நிலங்களில் சேர மரபினருடைய அரசின் தோற்றுவாய் நிலம் என்பது “சேர நாட்டுப் பகுதியிலுள்ள குட்டநாடேயாகும் ஏனெனில் ஏனைப் பொறைநாடு, பூழிநாடு, குடநாடு முதலியவற்றை நோக்க குட்டநாடே மிக்க வளம் பொருந்தியதென்பது நாடறிந்த செய்தி, நிலவளம் மிக்க இடத்தே மக்கள் உடல் வளமும் அறிவு வளமும் பெருகி சிறப்பரென்பது நிலநூன் முடிவு, அதனால் தொடக்கத்தில் சேரஅரசு குட்டநாட்டிலேயே உருவாகிக் கொண்டு சிறந்தது என்பது தெளிவாம், சேரவேந்தர்க்குரியது எனப்பேசப்படும் வஞ்சிநகர் இக்குட்ட நாட்டிலே இருப்பது இதற்குப் போதிய சான்று, ஆகவே சேரவேந்தருள் பழையோர் குட்டநாட்டவர் என்பதை அறியலாம்” (சேரமன்னர் வரலாறு ஔவை,சு, துரைசாமிப்பிள்ளை பக்கம்-46,பத்தி--2) என்னும் கருதுகோளைக் கொண்டும், மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கூறும் வரலாறுகளைக் கொண்டும் ஆராயும்போது பெருஞ்சோற்று உதியன் மரபிலிருந்து சேரமரபு துவங்குவதைத் தொகைநூல்கள் தெரிவிக்கின்றன, இவனுடைய மக்களுள் மூத்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இவனுக்கு சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவனுடைய காலத்தே சேரநிலம் குட்ட நாட்டிலிருந்து குடநாடு வரை விரிவு படுத்தப்பட்டது, இம்மன்னின் பெயரே அதற்குச் சான்றாவணமாக அமைகின்றது,, எனவே இம்மன்னன் விரிவு படுத்திய அந்த நிலத்திற்குப் பெயர் குடநாடு என்றும் இதனை ஆண்டதனால் இவன் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்றும் பெயர் பெற்றான்.

**சேர அரசியலின் போர்வெற்றிகளும் நில விரிவாக்கமும்**

சேர அரசர்களின் நிலவிரிவாக்கமானது சேர நெடுஞ்சேரலாதனுடைய சிற்றப்பன் அந்துவஞ்சேரல் இரும்பொறையிலிருந்து (இவன் உதயஞ்சேரலின் தம்பி) துவங்குகின்றது, இவர்கள் இருவரும் சேர்ந்து குடநாட்டை தொடர்ந்து சேரநாட்டை விரிவு செய்ய உம்பர்காட்டை (ஆனைமலை) கைப்பற்றுகின்றனர். இப்பகுதிக்குப் பொறை நாடு என்று பெயர் சூட்டுகின்றனர். இந்நிலத்திற்கு மன்னனாக அந்துவஞ்சேரல் இரும்பொறையை நெடுஞ்சேரலாதன் நியமிக்கின்றான் இவ்வாறாகத் தொடங்கியதே பொறைமரபினர் கிளை. தொடர்ந்து அந்துவஞ்சேரல் உம்பர்காட்டை தன்னுடைய அண்ணன் மகனான பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்கு விட்டுவிட்டு கொங்குநாட்டைக் கைப்பற்றுகின்றான், இன்றைய கருவூரை இவன் தலைநகராக வைக்கின்றான், “கருவூர் எறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை” என்ற இவனுடைய சிறப்புப் பெயரே இதற்குச் சான்றாவணமாக அமைகின்றது, நெடுஞ்சேரலாதனுடைய தம்பி பல்யானை செல்கெழு குட்டுவன் இம் மன்னனே குட்ட நாட்டை தலைநகராக மேலும் விரிவு படுத்தி அரசாண்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இதனால் உதயஞ்சேரல் வழிமரபினரின் நிலம் “குடக்கோ நாடு” மற்றும் “குட்டுவன்நாடு” என்பது “குடநாடு” மற்றும் “குட்டநாடு” என வழங்கிவரலாயிற்று,

மேற்கண்ட குட்டுவஞ்சேரல் இரும்பொறையும் அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகனான (பொறையன் மரபினன்) செல்வக்கடுங்கோ வாழியாதனும் ஒன்றாக இணைந்து தன்னுடைய தொன்மை சார்ந்த நகரான பூழிநாட்டை முதலாம் நன்னனிடமிருந்து மீண்டும் கைப்பற்றுகின்றனர். இந்த வெற்றியால் பெற்ற பூழிநாட்டை குட்டுவன் செல்வக்கடுங்கோ வாழியாதனிடமே ஒப்படைக்கின்றான், இதனால் செல்வக்கடுங்கோ வாழியாதன் “பூழியர் கோ” என்று புகழப்படுகின்றான். இந்த செல்வக்கடங்கோ வாழியாதனே கொங்கு நாட்டு எல்லைகளை விரிவு செய்தவன் என்பதும் தன்வாழ்நாள் முழுதும் போர் செய்து பல செல்வங்களை ஈட்டிய மன்னன் என்பதும் கபிலருடைய பதிற்றுப்பத்து ஏழாம் பத்து குறிப்பிடுகின்றது,

மேற்கண்ட இதே காலகட்டத்தில் களக்காய்கன்னிநார்முடிச் சேரல் வேணாட்டிற்கு வடக்கிலும், குட்டநாட்டிற்குத் தென்கிழக்கிலும் பாண்டி நாட்டைச் சார்ந்தும் இருந்த குன்றா நாட்டிலிருந்து நாடுகாவல் செய்து வந்தான். பின்னர் இம்மன்னன் குட்டுவன் மறைந்ததால் அரசு கட்டிலுக்குரிய

பூழிநாடு கடந்து குட்டநாடு புகுந்து முடி சூட்டிக்கொண்டான், பூழிநாட்டுத் தலைவர் சிலர் இரண்டாம் நன்னன் பக்கமிருந்து பூசல் செய்தமையால் மீண்டும் நன்னனை வென்று பூழிநாட்டைச் சேரர்க்குரியதாக மாற்றி அமைத்தான். பின் வைகைக் கரை வழியே படை செலுத்தி பாண்டியன் நெடுமிடல் அஞ்சி முன்னர் தன் படைத்தலைவனை வென்று கைப்பற்றிய அளநாட்டை மீட்டமைகின்றான்,.

இவனுக்குப் பின்னர் சேரன் செங்குட்டுவன் சேர அரசனானான். இவன் ஆட்சிக் காலத்தே இவனுடைய மைத்துனான கிள்ளிவளவனோடு ஒன்பது சோழர்கள் உள்நாட்டுப் போர் செய்தனர். இது கண்டு செங்குட்டுவன் உறையூர் நேரிவாயில் என்கின்ற இடத்தில் ஒன்பது சோழர்களையும் வென்று தன் கிள்ளிவளவனை சோழஅரசு கட்டிலில் அமர்த்தினான். இவ்வெற்றிகளை அடுத்து யவனரும் வடவரும் கூடி பெரியதொரு கடற்படை கொண்டு போருக்கு வர, செங்குட்டுவன் தன்னுடைய கடற்படை கொண்டு எதிர்த்து வந்தவரை வெற்றி கொண்டான். இதனால் செங்குட்டுவன் "கடற் பிறகோட்டிய செங்குட்டுவன்" என்று புகழப்பட்டான். அடுத்தபோர் நிகழ்வாக தன்னுடைய படைத்தலைவன் "அறுகை" என்பவனுக்காக மோகூர் பழையனையும் உடன்நின்ற நெடுமிடல் வென்று அவன் காவல் மரமான வேம்பினை வெட்டி முரசம் செய்தான் என்ற வரலாற்று செய்திகளை ஐந்தாம் பத்தில் பரணர் பதிவு செய்கின்றார்,

அந்துவஞ்சேரல் வழிவந்த செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு பிறகு அவன் மகனான பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு தமிழகத்தின் முப்பெரும் வேள் புலங்களாகத் திகழ்ந்த காமூர், கொல்லிமலை, தகடூர் ஆகிய இடங்களை தாக்கி வெற்றி கொள்கின்றான். இவனுக்குப் பின் இவனுடைய தம்பியான குட்டுவன் சேரலின் புதல்வன் இளஞ்சேரல் இரும்பொறை அரசனாகிறான், இம்மன்னன் தென்கொங்கு நாட்டினுடைய திருச்சிராப்பள்ளி மாவட்டப் பகுதியில் அமைந்துள்ள பச்சைமலையை அடுத்த விச்சிநாட்டைக் கைப்பற்றுகின்றான். மேலும் இவ்வேள்புலத்தையும் அதற்குரிய புகழ்சான்ற ஐந்தெயிற் கோட்டையையும் வெற்றி கொண்டான், இதனை அடுத்து "நன்னன், நறும்பூண்அத்தி, துன்னருங்கடுந்திறல் கங்கன், கட்டி, பின்னணிவல்வில், என்ற வேளீர் ஐவரையும் மூன்றாம் நன்னனையும் புன்னுறை என்னும் இடத்தில் தாக்கி புன்னாட்டைக் காத்தான். பொறைமரபின் உச்சமாக சோழன் பசும்பூட் சென்னியுடன் கழுமலம் (குழுமம்) என்ற இடத்தில் போர் செய்து அவனையும் அவன் படைத்தலைவனான இளம்பழையன் மாறனையும் வெற்றி கொண்டு சோழர் அருந்தனமாக பேணி வந்த சதுக்கபூத வடிவத்தை எடுத்து வந்து கருவூரிலே நிறுவி விழா எடுத்தான்.இந்நிகழ்வை "சதுக்க பூதரை வஞ்சியுள் தந்து மது கொள வேள்வி புரிந்தோன்" என்று சிலம்பு புகழ்கின்றது.

பொறை மரபின் இளஞ்சேரல் இரும்பொறையின் காலகட்டமும் கடல் பிறகோட்டிய செங்குட்டுவனுடைய ஐம்பதாமாண்டு கால கட்டமும் ஒரே காலம் என ஆய்வறிஞர்கள் கருதுகின்றார்கள், எனவே இக்கால கட்டத்திற்கு முன்னர் களக்காய்கண்ணிநார்முடிச் சேரல் காலத்தே கடம்பின் வாயிலில் இருந்து வென்ற கடம்பர்கள், மீண்டும் கிளர்ச்சி செய்த போது கொங்கிளம் கோசரோடு இணைந்து செங்குட்டுவன் கடம்பரை வென்று அப்பகுதியை கோசர்களுக்குக் கொடுக்கின்றான். இந்நிகழ்வு சேர அரசியலில் புதிய முறையாகக் கருதலாம், ஏனெனில் இதுவரை தன் தாயாதியருடன் நிலங்களைப் பகிர்ந்து கொண்ட சேரமரபு மாற்றாக கோசர்களிடம் நிலத்தைப் பகிர்ந்து கொண்டது. (செங்குட்டுவன் வட ஆரியரை வென்று கண்ணகிக்கு கோட்டம் எடுத்ததும் இக்காலகட்டத்திலேயே நிகழ்ந்தது). கண்ணகி கோட்டம் எடுத்து செங்குட்டுவன் விழா கொண்டாடிய சபையிலே பெரும் அழைப்பாளர்களாக சமகால மன்னர்கள் பலர் வந்திருந்தனர் அவர்களுள் கோசர்களும் ஒருவர்.

இக்கோசர்கள் மெல்ல மெல்ல வளரத் தளைப்பட்ட பொழுது அந்துவஞ்சேரல் மரபினுடைய நேரடி அரசியல் வாரிசான யானைகட்சேய் மாந்தரன் தன்னுடைய ஆட்சியின் வலிமை குன்றத் தொடங்கிய நிலையை எட்டி இருநதான், இவனை எதிர்த்துச் சோழன் குராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன் கரூவூர் கோட்டையை முற்றுகையிட்டான். இதே சமயம் பாண்டியன் சேரப் பேரரசை தாக்கத் துவங்கி இருந்தன், எனவே இருமரபினரும் ஒன்றிணைந்து எதிர்க்க முடியாத நிலையைச் சோழ, பாண்டிய அரசுகளால் உருவாக்கப்பட்டது. இந்நிகழ்வு யானைகட்சேய்யை சோழனிடம் தோற்று அவன் கீழ் சிற்றரசாக ஆள வைத்தது.

செங்குட்டுவனுக்குப் பிறகு உதியஞ்சேரமரபில் அவன் தம்பி ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் பின் செங்குட்டுவனுடைய மகன் கோக்கோதை மார்பனும் ஆண்டதாகவும் தரவுகள் கிடைக்கின்றன, கொங்குச்சேரர் மரபிலும் யானைகட்சேய்க்குப் பிறகு கணைக்கால் இரும்பொறை என்ற மன்னன் ஆண்டு திருப்போர்புயம் என்னும் இடத்தில் சோழன் செங்கண்ணனிடம் தோல்வியைத் தழுவியதாகவும் வரலாறு அமைகின்றது. எனினும் இவர்கள் முன்னோர் போல

பேரரசுகளாக திகழவில்லை என்பதே வரலாறு காட்டும் வெளிச்சம்.

### சேரர்களின் பேரரசை நோக்கிய பயணமும் பொருளாதார பின்புலமும்

சேரர் குடி அரசமரபாக உருப்பெரும்முன் தாய்வழிதலைமை. பின்னர் ஆணாதிக்கக் குடித்தலைவன், குழுத்தலைவர் என்ற நிலைகளை உடையதாகவும், பின் சீறூர் மன்னர் என்ற நிலையை எட்டி இருக்கலாம், இச்சீறூர் மன்னர் நிலையில் உள்ள சேரர் அந்துவன் சேரல், இவரிலிருந்து தோன்றய சேரர் அரசமரபு என்பது தந்தை-மகன் அவனுக்கு பின் அவனுடைய தம்பி, அடுத்ததாக மூத்த மகனுடைய மகன் இவ்வாறு ஆண்வழி அரச மரபாகவே அமைந்திருந்தது என்பது பதிற்றுப்பத்தின் வழி காணலாகும் அரசியல்நிலை, மேலும் இந்நூல் சீறூர் மன்னர் நிலையிலிருந்து சேரமரபு பேரரசு தோற்றம் பெற்ற வளர்ச்சி நிலையை குறித்து ஆராய பெறுதும் உதவுகின்றது,

இவ்வாறான பேரரசுத் தோற்றம் என்பது போர்களுடைய வரலாற்று வெற்றிகளால் மட்டும் உருவானதன்று, நேரடியாகப் போர்ப்படையினுடைய கைவலிமை மட்டுமின்றி புலங்களும், வாணிபப்பெருநிதிகளும் அதன் மறைமுக பின்னணியில் அமைந்திருந்து. பொதுவாகப் புலங்களில் மருதநிலம் வளம் பொருந்திய நிலமாகவும் அதனுடைய உற்பத்தி உபரி என்பது ஏனைய நிலங்களை விடவும் அதிகமானதாகவும் திகழும் ஆனால் இத்தகைய புலங்களைச் சேரஅரசு கொண்டிருக்கவில்லை, அவர்களுடைய தோற்றுவாய் நிலம் என்பது வன்புல வைப்பாகவும் குறிஞ்சி சார்ந்த மலை நிலங்களாகவும் மேடு பள்ளங்களாகவும் நெய்தல் சார்ந்த கடல் பகுதிகளாகவுமே இருந்தது, எனின் அவர்களுக்கு உபரி உற்பத்தி பொருளாதார வளமைக்கு முதற்காரணி அவர்கள் செய்த கடல் வாணிபமே எனலாம்.

சேரர்களுக்குத் தொண்டி, முசிறி, மாந்தை, மூன்றும் தன்புலத்துறை முகங்களாகவும், பின் போர் வெற்றியால் நன்னனிடமிருந்து பெற்ற மங்களூர், நறவு என்ற துறைமுகப் பட்டினங்கள் இருந்தது, மேலும் மேலைக் கடற்கரை வழியாக யவனர்கள் நேரடி வாணிபமாகத் தொடர்பு கொண்ட மைய இடமே சேரமண்டலம் ஆகும். இத்துறைமுகங்கள் வழியாகக் காடு குன்று, வன்புலம், கடரு, மலை முதலிய பகுதிகளில் கிடைத்த அரிய கல்மணிகள், கனிமங்கள், பொன் மற்றும் இரும்பு உலோகங்கள் கடலில் கிடைத்த பவளம், முத்து ஆகிய விலை மதிப்புமிக்க இயற்கைப் பொருட்கள் ஈரப்பதம் மிக்க பருவமழைக் காடுகள், மலைகளில் சேகரித்த மரங்கள், மணப்பொருட்கள், உணவுப் பொருட்கள், கால்நடைகள், விலங்கினங்கள், யானைத் தந்தங்கள் முதலியவையும் அவை சார்ந்த தொழில்நுட்பங்களும் உற்பத்திகளும் அங்காடி வடிவம் முதல் பெருங்கடல் வணிகம் வரை வணிகத் தொழில் வளர்ந்து சேரநாட்டு ஆட்சியாளர்களுக்குத் தேவையான செல்வத்தைத் தந்தது.

**சான்றுகளாக**

- மாந்தைப் பட்டினத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பொன், வைரம், மணி என பெருஞ்செல்வத்தை ஆம்பல் கணக்கில் புதைத்து வைத்திருந்தான் என்று அகநானூறில் மாமூலனார் கூறுகின்றார்.
- முசிறி துறைமுகத்தில் முக்கியமாக மிளகு ஏற்றுமதி ஆயிற்று யவனக் கப்பல்கள் மிளகை வாங்குவதற்காகவே முசிறிக்கு வந்தது., யவனர் முசிறியை "முசிறிஸ்" என்று கூறுகின்றனர், வால்மீகி இராமாயணம் முசிறியை "முரசிபதனம்" என்று கூறுகின்றது, முசிறி கடலில் முத்து சிற்பிகளும் உண்டாயின, முசிறியில் உண்டான முத்துக்களை கவ்டல்யர் அர்த்தசாஸ்திரத்தில் "கௌர்ணெயம்" என்று கூறுகின்றார்,

முசிறி பட்டினத்தைச் சேர்ந்த பந்தரில் முத்துக்களும், கொடுமணம் என்ற இடத்தில் பொன்நகைகளும் விற்கப்படுகின்றன என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது.

> "சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
> யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னோடு வந்து கறியொடு பெயரும்
> வளங்கெழு முசிறி". (அகம்-149:8-11)

கொடுமணம் பட்ட வினைமாண் நன்கலம் (பதி, பத்து-7-67)

இவ்வாறாகச் சேரர்களுடைய கடல் வாணிபமும் அதன் மூலமாகப் பெற்ற வருவாயும் இலக்கியங்கள் வழியும், கொடுமணலில் செய்த தொல்லியல் அகழாய்வுகளின் மூலமும் அறிய முடிகின்றது.

அடுத்ததாக போர்களின் மூலமாக விரிவுபடுத்தப்பட்ட நிலங்கள் வெற்று நிலங்களுக்காக மட்டுமல்லாமல் பொருளாதார பின்புலத்திற்காகவும் பிடிக்கப்பட்டன. சேரரின் ஆட்சிக்குள் அடங்கியும் அடங்காமலும் வாழ்ந்த பூழியர் என்னும் கால்நடை வளர்ப்புக் குடியினரையும் பூழி நாட்டுக் குன்றையும் வென்றதன் மூலமாக குன்றுகளில் கிடைத்த கதிர்மணிகளை ஏற்றுமதி செய்தனர். நன்னனை வென்றதன் மூலம் கொங்காணத்தின் இரு

துறைமுகங்களையும் (மங்களூர், நறவு) பெற்றனர்,

“பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் மீது படை எடுத்ததற்கும் அப்பகுதியில் உள்ள கனிமவளமும், பெருவழியில் அமைந்திருந்ததும் காரணமாகும் அப்பகுதியில் இரும்பு, மைக்கா, பொன்னழகு மணிகள் போன்றவை கிடைத்துள்ளன தற்காலத்திலும் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன வடுகர் தேயத்திற்குச் சென்ற பண்டைய பெருவழி அதியமான் நாட்டின் வழியாகச் சென்றுள்ளது. அவ்விரு பொருளியல் காரணங்களுக்காக பெருஞ்சேரலிரும்பொறை அதியமான் நாட்டின் மீது படையெடுத்து இருக்க வேண்டும்” என்று தொல்குடி வேளிர் வேந்தர் என்ற நூலின் கண் கல்வெட்டு ஆய்வறிஞர் முனைவர், ரா, பூங்குன்றன் குறிப்பிடுகின்றார், (பக்கம்-113 பத்தி-2)

அண்ணாருடைய அதே நூலின்கண் கொல்லி மலையில் பொன்னும் மணியும் கிடைப்பது பற்றிச் சங்கப் புலவர் பாடியுள்ளார் பொன்வளத்தைத் தன் ஆட்சியில் கொண்டுவரவே சேரன் படையெடுத்தான் என்ற செய்தியை அறிய முடிகின்றது என்று குறிப்பிடுகின்றார், (பக்கம்-113 பத்தி-1)

சேரர்கள் கொங்கு நாட்டைத் தன்னுடைய இளைய தாயாதியரின் வழி விரிவுபடுத்தியதன் நோக்கம் மேய்ச்சல் நிலங்கள் அதிகமாகக் கொங்கு நாட்டில் இருந்ததும் அதன் மூலமாக கால்நடை வளர்ப்பு என்பதும் ஆநிரை உற்பத்தியை அதிகப்படுத்தவும், மேலும் கொங்கு நாட்டினுடைய பொன்மணி முத்துக்கள் கிடைத்த இடங்களில் (கொடுமணம், கரூவூர், படியூர்,வெள்ளலூர்) இருந்து அவைகளை ஏற்றுமதி செய்யவும் உதவியது. கொடுமணத்தின் பொன்மணிகள் பந்தர் (முசிறி) துறைமுகத்தில் யவனக்கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்பட்டது.

மேலும் மருதநில உபரியாகக் காவிரிப் படுகை, அமராவதிப் படுகை பேறியாற்றுப் படுகை, வாணியாற்றுப்படுகை, முதலிய மென்புலங்களின் நெல் உற்பத்தி சேர அரசிற்குக் கிட்டியது இதனால் உணவுத் தேவை வேற்றுப் புலங்களை எதிர்பார்த்திருக்கும் நிலையில்லாது தன்னிறைவு பெற்றிருந்தது.

சிற்றரசர்களால் ஆளப்பட்ட பூழி, கொங்கு, கொங்கானம், கொல்லி, முள்ளி, குதிரைமலை, தகடூர் முதலிய பகுதிகளில் வேற்றுப்புல அரசர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாவல் பெற வேண்டும் எனில் சேரர்களுக்கு சிற்றரசர்கள் திறை செலுத்த வேண்டும் என்கின்ற நிலைமையும் இருந்தது. திறைபெறுதல் சேரரின் போர்களுக்கு ஒரு முக்கியக் காரணமாகவும் இருந்தது இதனை அரிசில்கிழார் “இடுக திறையே புரவு எதிர்ந்தோற்கு” என்று எட்டாம் பத்தில் குறிப்பிடுகின்றார்.

### வைதீகம் சூட்டிய மணிமுடி

மேற்கண்ட பொருளாதார வழிகளிலே தங்களது அரசை வலுவாகக் கட்டமைத்துக் கொண்ட சேரர்கள் தங்களுடைய பழக்கவழக்க முறைகளை பண்டைய தொல் நிலையிலிருந்து கருத்தியல் ரீதியாக நாகரீக நிலைக்குக் கொண்டு செல்ல முற்படுகின்றார்கள், இந்நகர்வுகள் தெள்ளத் தெளிவாக பதிற்றுப்பத்து படம் பிடித்துக் காட்டுகின்றது, “பல்மீன் நாப்பண் திங்கள் போல பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை உருகெழு மரபின் அயிரை பரவியும்” (பதி,பத்து-3-56) என்ற வரிகள் கொற்றவை என்னும் தாய் தெய்வத்தை தனது சுற்றமோடு சேரர் போற்றி வந்தனர் என்கின்ற வழிபாட்டு நிலையை காட்டுகின்றது இது தமிழருடைய தாய் தெய்வ வழிபாட்டு நிலை எனலாம். ஆனால் இவ்வாறு இருந்த சேர மரபு மெல்ல மெல்ல “வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துக் கடவுள் மங்கலம் செய்கென ஏவினான்” (சிலம்பு, வஞ்சி 45:3-4) என்ற நிலையை அடைந்தது என்றால் எங்கனம் வைதீகம் அவர்களுக்கு உதவி இருக்கும் என்பது இங்கு ஆய்விற்குரியதாகும்,

நெடுஞ்சேரலாதன் தன்னைப் பாடிய குமட்டூர் கண்ணனார் என்ற பிராமணப் புலவருக்கு உம்பர்காட்டின் ஐநூறுஊர்களை பிரமதேயமாக அளித்துள்ளான், இக்கொடை வெறும் பெருமைக்காக மட்டுமல்லாமல் உம்பர்காட்டில் இருந்த தொல்குடிகளிடையே வைதீகச் சிந்தனையை மெல்ல மெல்ல விதைக்கவும் பயன்பட்டது. (பின்னாளைய சதுர்வேதி மங்கலங்களும் அதனை சுற்றி எழுந்த அரசியல் நிலைகளும் இதனோடு வைத்து ஒப்பு நோக்கத்தக்கது)

பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடிய பாலைக்கவுதமன் என்கின்ற பார்பனப் புலவர் மன்னனை ஒன்பது வேள்விகள் செய்ய வைக்கின்றார். இவ்வாறு வேள்வி செய்து ஆகுதி இட்டு வேண்டினால் தேவர்கள் நன்மை நல்குவார்கள், மன்னன் பலம் பெருந்தியவனாகத் திகழ்வான், மேலும் பல புலங்களை வெற்றிபெறவும், செல்வங்களைச் சேர்க்கவும் உதவும், வாழ்வின் இறுதி நிலையில் விண்ணுலகப்பேறு கிட்டும் என்கின்ற புதிய சிந்தனைகளை வைதீகம் வட புலத்திலிருந்து தென்புலத்திற்கு அறிமுகம் செய்து வைக்கின்றது, இதன் மூலம் வேள்வி செய்தால் நன்மை கிட்டும் என்கின்ற அவா பல அரசர்களை வேள்வி செய்ய அடிகோலியது, மேலும் இச்சிந்தனை மெல்ல மெல்ல குடிகளிடமும் பரவிச் சமூகஅமைப்பை இணைக்க அடிகோலியது, இச்சடங்கு செய்வது

மேட்டுமைத் தன்மையானது (உயர்குடிநிலை) என்கின்ற எண்ணமும் அவர்களிடையே உருவாக ஆரம்பித்திருந்தது.

“ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் என்றுஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுக, பாடல் சான்று
நாடுடன் விளங்கும்..... (பதி.பத்து-3,24;6-10)

இவ்வாறு பாலைக்கவுதமனார் பிராமண வர்ணத்தின் தலைமையிடத்தைச் சற்றும் ஐயப்பாடின்றி உரைக்கின்றார். அந்தணனை மன்னன் பணிந்து ஒழுகினால் நாடும் அவனைப் பணியும் என்று வைதீகச் சிந்தனையினுடைய மிக உச்ச நிலையைக் குறிப்பிடுகின்றார். இதே கருத்து நிலையை கபிலர் ஏழாம் பத்தில் “பார்ப்பார்க்கு அல்லது பணிவு அறியலையே” என்று மன்னன் பார்பனருக்கு மட்டும் பணிந்தால் போதும் வேறு எவருக்கும் பணிய வேண்டியது இல்லை என்கின்ற கட்டளையைப் பிரகடனப்படுத்துகின்றார்.

“யாகம் பண்ணுவதற்கு ஆதாரமான விதிகளைக் கற்றறிந்து யாகம் பண்ணுவதற்கு முன்னர் செலுத்தும் விரதங்களைப் பிசகாது அனுசரித்து நின்தேவி நின்வழியில் வாழும் பொருட்டு வேள்விக்குரிய மான் தோலைப் பெறுவதற்கு பெரும் மலையில் தேடி கவைமரம் போல் கொம்பும் புள்ளிகளும் உடைய புள்ளிமானை பிடித்து வந்து அதன் தோளில் உள்ள ஊனை அகற்றி தோளின் வட்ட வடிவமான விளிம்பில் கொடுமணம் ஊரில் செய்த அரிய கலன்களையும் பந்தர் ஊர் கடலில் கிடைத்த முத்துக்களையும் இனமாக கோர்த்துக் கட்டி கூரிய இரும்பால் செய்த கருவிகளைக் கொண்டு தோலில் செய்யும் வினைகளை எல்லாம் செய்து அமைத்து அந்தத் தோலை யாகம் செய்வோர் போர்த்தி யாகம் செய்ய நின் தேவியின் கருவில் பத்து மாதம் நிரம்பிய நற்குணமும் அறிவும் வாய்ந்த புதல்வனை பெற்றாள்”

எட்டாம் பத்தில் பெருஞ்சேரல் இரும்பொறை புத்திரகாமேஷ்டி யாகத்தினைச் செய்ததை உ,வே,சா உரையானது இவ்வாறு தெரிவிக்கின்றது, (பதிற்றுப்பத்து உ,வோ,சா உரை-பக்கம் 279) இதில் குறிப்பிட்டுச் சொல்வது யாதெனில் “கொடுமணம் ஊரில் செய்த அரிய கலன்களையும் பந்தர் ஊர் கடலில் கிடைத்த முத்துக்களையும் இனமாகக் கட்டி, கூரிய இரும்பால் செய்த கலன்களைக் கொண்டு தோலில் செய்யும் வினைகளையெல்லாம் செய்து“ என்கின்ற பதிற்றுப்பத்துச் செய்தி பொருளாதாரம் வைதீகத்திற்கு எவ்வாறு உதவியது வைதீகம் அரசருக்கு எவ்வாறு உதவியது என்கின்ற இரு கலப்பு நிலைகளைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

## முடிவுரை

சேர அரச மரபு சீறூர்மன்னர் என்ற நிலையிலிருந்து தனது புலங்களையும், செல்வங்களையும் பெருக்கிக் கொண்டு அரசுகளாகவும், பின்னர் வைதீக நெறிகளிலெல்லாம் உட்பட்டு மேட்டுமை குடிசார்ந்த பேரரசுகளாகவும் உச்சநிலை கண்டனர், இதன் வழி தமிழக அரசியல் வரலாற்றில் போர் மூலம் பெற்ற நிலஉடமை, பொருளாதாரக் காரணிகள், வைதீகநெறி இவைகளை கொண்டு பேரரசை கட்டமைக்க முடியும் என்கின்ற கட்டமைப்பை முதலில் அறிமுகப்படுத்தியது சேர அரச மரபே என்றால் அது மிகையில்லை. அன்றளவு தொடங்கிய இந்நிலை பின்னாளில் உருவான அரச நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது, இது இன்றளவும் சமூகத்தில் அதிலும் குறிப்பாக அரசியல் மையங்களில் தொடர்ந்து வருகின்றது,

## துணை நூற்பட்டியல்


1. கொங்கு நாட்டு வரலாறு–மயிலை,சீனி,வேங்கடசாமி-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இரண்டாம் பதிப்பு-2017
2. சேரமன்னர் வரலாறு-ஔவை,சு, துரைசாமிப்பிள்ளை-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் முதற்பதிப்பு-2015
3. பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப்புரிதலை நோக்கி-கார்த்திகேசு சிவத்தம்பி-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்-இரண்டாம் பதிப்பு-2019
4. சங்க இலக்கியம் பதிற்றுப்பத்து மூலமும் தெளிவுரையும்-அறிஞர் ச,வே, சுப்பிரமணியன்-மணிவாசகர் பதிப்பகம்-மூன்றாம் பதிப்பு-2015
5. சிலப்பதிகாரம் மூலமும் உரையும்-ந,மு, வேங்கடசாமி நாட்டார்-ராமையா பதிப்பகம்-ஏழாம் பதிப்பு-2014
6. தொல்குடி வேளிர் வேந்தர்-முனைவர் ர, பூங்குன்றன்-மூன்றாம் பதிப்பு-2022